# 8 அரசியல்கட்சி பிரதிநிதிகள் ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காக எட்டு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்தனர்.
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 02 இதழ் 126
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 16 — 06 — 1992

## அரசு புலிகளுக்கு மறைமுகத்தூது?

(கொழும்பு)
வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி தேர்தலை நடத்தவும் அதில் புலிகள் பங்கு பற்றவும் சிறிலங்கா அரசு புலிகளுக்கு மறைமுகத் தூது அனுப்பியதாக் வெரித்
[4-ம் பக்கம் பார்க்க]

## புலிகளால் நீடித்து போரிட முடியும்

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் மிகவும் சக்தி வாய்ந்தவர்கள் என்பதால், சிறிலங்கா அரசுடனான போரை அவர்களால் நீண்ட காலமாக நீடித்து நடத்தமுடியும் என்று அரசியல் பார்வை
(4ம் பக்கம் பார்க்க)

## ★ அலம்பில் பகுதியில்

# புலிகளின் திடீர்த் தாக்குதலில் 6 இராணுவத்தினர் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு-அலம்பில் பகுதியில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது மேற்கொண்ட திடீர் அதிரடித் தாக்குதலில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பெருமளவு நவீனரக ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 9-50 மணியளவில் அலம்பில் சந்தியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் குழுமுனையை நோக்கி வீதித்தடைகளை அகற்றியபடி சுமார் 150 யார் தூரம் முன்னேறியபோது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 6 இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர். ஏனையோர் பலத்த காயங்களுடன் முகாமுக்குள் ஓடிவிட்டனர்.

இத்தாக்குதலில் ஏ. கே. இலகு இயந்திரத்துப்பாக்கி.1 ரி 56 ரக துப்பாக்கிகள்-2, ரி
(4ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் படையினரால் இரு தமிழர் வெட்டிக்கொலை

(திருமலை)
திருகோணமலையில் இருதமிழர்கள் சிங்கள ஊர்காவல் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

கடந்த 9ம் திகதி திருமலை பூநகரியில் வைத்து ஈச்சிலம்பத்தையைச் சேர்ந்த செல்வம் தங்கராசா, கணபதிப்பிள்ளை தர்மராசா ஆகியோரே இவ்வாறு வெட்டிக் கொல்லப்பட்டவர்களாவார்கள். [ரி]

## 15 தமிழ் பிரயாணிகள் கிரான் குளத்தில் கடத்தல்

(கொழும்பு)
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிரான்குளத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸில் பயணம் செய்துகொண்டிருந்த 15 பஸ் பயணிகள் ஆயுதந்தரித்த நபர்களினால் நேற்றுமுன்தினம் கடத்திச் செல்லப்பட்டதாகவும் இவர்கள் அனைவரும் தமிழர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மாலை திருக்கோவிலிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்த பஸ்
[4-ம் பக்கம் பார்க்க]

## பென்சன் வவுச்சர்

(யாழ்ப்பாணம்)
ஆனி மாதத்துக்குரிய பென்சன் வவுச்சர்கள். நேற்று யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்தன.

இந்த வவுச்சர்கள், இவ்வார இறுதிக்குள் உரியவர்களுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.
[4ம் பக்கம் பார்க்க]

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)
யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்குச்சட்டம் உடனடியாக நீக்கப்பட்டதாக கூட்டுப்படை தலைமையகம் நேற்று அறிவித்தது. (க)

## தமிழ் இளைஞர்களை ஏமாற்றி பயண முகவர்கள் 50 லட்சம் ரூபா மோசடி!

[கொழும்பு]
வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக கூறி கடந்த 10 மாத காலத்தினுள் வடக்கு-கிழக்கு இளைஞர் யுவதிகளிடம் 50லட்சம் ரூபாவிற்கு மேல் மோசடி செய்யப்பட்டுள்ளது.

சுவீஸ், கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு அனுப்புவதாக கூறியே பயண முகவர்கள் 50 லட்சம் ரூபா
[4ம் பக்கம் பார்க்க]

## சீமெந்து தொழிற்சாலை ஊழியருக்கு நிவாரணம்

[யாழ்ப்பாணம்]
காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் வேலை செய்த ஊழியர்கள் அனைவருக்கும் உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி தொழிற்சாலையின்
(4-ம் பக்கம் பார்க்க)

# இராணுவம் வடபகுதியை நான்குவலயங்களாகபிரித்து தாக்குதல் நடத்த முஸ்தீபு!

(கொழும்பு)
வடபகுதியை நான்கு வலயங்களாக பிரித்து அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் தீவிரவாதிகளை இல்லாதொழிக்கம் ஏற்ற வகையில் நடவடிக்கை எடுக்க வசதியாகவேஇப்பகுதி நான்கு வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதாம்.

ஒவ்வொரு வலயத்திற்கும் பிரிகேடியர் ஒருவர் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேஜர் ஜெனரல்கள் டென்ஸில் கொப்பேகடுவ, ஜெரி டி சில்வா ஆகியோரின் வழிகாட்டலில் இந்தப் பிரிக்கேடியர்கள் செயல்படவுள்ளனராம். (சி)

## மேலதிக படைகள் அனுப்பி வைப்பு

(கொழும்பு)
யாழ். குடாவுக்கு மேலதிகப் படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் பாதுகாப்புப் படையினர் வசமுள்ள பகுதிகளைப் பலப்படுத்தும் வகையில், இந்த மேலதிகப் படையினர் பதுங்குகுழிகளை அமைப்பதிலும், பாதுகாப்பு அரண்களை அமைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனராம்.

தமது நிலைகளைப் பலப்படுத்திய பின்னர், படையினர் அடுத்த கட்ட நடவடிக்கையை ஆரம்பிப்பார்கள் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (சி)

## இந்தியாவில் இன்று வேலைநிறுத்தம்

(புதுடில்லி)
இந்திய அரசின் புதிய பொருளாதாரக்கொள்கையை எதிர்த்து இன்று நாடு தழுவிய ரீதியில் வேலைநிறுத்தம் ஒன்றிற்கு எதிர்க்கட்சிகளும் பல தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளன.

இந்த வேலைநிறுத்தத்தில் அனைத்து தொழிற்சங்கங்களும் கலந்துகொண்டு நாடு முழுவதையும் ஸ்தம்பிக்கச்செய்யுமாறும் இவை கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளையில் நாட்டின்
[4-ம் பக்கம் பார்க்க]

## தமிழகத்தில் 11,000 பேர் நேற்று கைது

[சென்னை]
இந்தியாவில் இன்று நடைபெறவுள்ள நாடுதழுவிய வேலைநிறுத்தத்தை ஒட்டி தமிழகத்தில் முன்னெச்சரிக்கையாக 11,000 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம் எங்கும் பாதுகாப்பு நிலைமைகள் பலப்படுத்தப்பட்டு முக்கிய நகரங்கள் எங்கும் பெருமளவு படைகள் குவிக்கப்பட்டுள்ளன.

சட்டம் ஒழுங்கை குலைப்போர் மீது கடும நடவடிக்கை
[4-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**இரசாயனம்**

A/L 93 அசேதன இரசாயனம் ஆரம்பம் 16-6-92 செவ்வாய் 4. 15 p.m. ஆசிரியர் சத்தீஸ் 108பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி-6421)

**பாலாஜி புத்தகசாலை**

'பிறந்ததின வாழ்த்து மடல் புத்தம் புதிய டிசைன்களில் உள்ளது. உங்கள் தேர்வுக்கு இன்றே முந்துங்கள்) 15%கழிவு வழங்கப்படும் 1ம் ஒழுங்கை, 27,மின்சாரநிலையவீதி யாழ்ப்பாணம். (ஏ 2223)

**விற்பனைக்கு**

இலகு தமிழ் இலக்கணம் வினு—விடை ரூ 12-50 தமிழ்த்தென்றல் —யாதுமூரானின் கவிதைகள் விலை ரூ. 20-00. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (சி-6124)

**''சுவையகம்''**

வீட்டில் நடைபெறும் மங்களகரமான வைபவங்களுக்கு ஏற்ப தரமான சிற்றுண்டிகளை ஓடருக்கு செய்து கொள்ள ஒரே இடம் ''சுவையகம்'', பிரதன வீதி, (யூனியன் பெற்றோல் நிலைய அருகாமை), சாவகச்சேரி. (சி-2215)


## மக்கள் வெளியேற்றம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் மேற்கு பகுதியிலிருந்து பெருந்தொகையான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்கு தங்கள் முக்கியவீட்டுப் பொருட்களையும் ஏற்றிக் கொண்டு சென்றுள்ளார்கள்,

சில குடும்பங்கள் பகலில் வீடுகளில் சமைத்து சாப்பிட்டு விட்டு இரவில் அயல் கிராமங்களுக்கு சென்று இராப் பொழுதை கழித்துவிட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது. (72)

## சனசமூகநிலைய ஆண்டுவிழா

(மானிப்பாய்)

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தின் 41வது ஆண்டு நிறைவு விழா இம் மாதம் 21ந் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

### புவி உச்சி மாநாடு

# அமெரிக்கா பலத்த கண்டனங்களுக்கு உள்ளானது

(றியோடி ஜெனரோ)

பிரேஸிலில் நடைபெற்ற சுற்றுச்சூழல் மகாநாட்டில் உலகத்தலைவர்களுடன் ஒத்துழைக்கத்தவறிய அமெரிக்கா பலத்த கண்டனங்களுக்குள்ளாகியது.

அமெரிக்க ஜனதிபதி ஜோர்ஜ் புஷ் றியோடி ஜெனிரோ மகாநாட்டில் நில உலக மகாநாட்டின் சாதனைகள் என்று கருதும் அம்சங்களை விளக்கியிருக்கிறார்.

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் வளம் அந்நாட்டின் சுற்றுடல் பாதுகாப்பும் ஒன்றுசேரக்கூடியதென்று உலகநாடுகள் வற்புறுத்தி வருவதால் அது முக்கியப்படுத்தவேண்டும் என்றும்—

அமெரிக்க மக்கள் தமக்கு விருப்பமில்லாத கொள்கைகளை கடைப்பிடிக்கவேண்டுமென்று ஒருபோதும் வற்புறுத்தப் படமாட்டார்கள் என்றும் புஷ் மேலும் கூறியுள்ளார். (சு)

## இராசி பலன்

16-06-1992

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு ஆனி 02)

பிரதமை: மு. ப. 11.33 வரை.

மூலம்: மு. ப. 11.24 வரை

அமிர்தசித்தம்: இராகு

காலம்: பகல் 2.53 முதல் 4.23 வரை

சுபநேரம்: காலை 10.23 முதல் 11 53 வரை.

மேடம்: உடல்நலக்குறைவு, வீண் விரையம், குடும்பகவலை.

இடபம்: முயற்சி தோல்வி, கடன்கமை, அலைச்சல்

மிதுனம்: நண்பர்அனுகூலம் திடசித்தம், பணவரவு.

கடகம்: எதிரிகள் எதிர்ப்பு, புதிய நட்பு, வெகுமதி.

சிங்கம்: வீண் கோபம், தொழில் பாதிப்பு, காரிய தடை.

கன்னி: சந்தர்ப்பத்தை தவறவிடல், ஏமாற்றம், பகை

துலாம்: தாய்வழி உதவி; வஸ்திரலாபம், பாராட்டு.

விருச்சிகம்: வீணைதழப்பம், படபடப்பு, வாக்குப் பகை.

தனுசு: தொழில் லாபம், மனமாற்றம், இடையூறு.

மகரம்: தடுமாற்றம, நோய் உபாதை, மனச்சஞ்சலம்.

கும்பம்; சுபகாரிய செலவு, புதியசிந்தனை. தானதர்மம்.

மீனம்: மேலதிகாரிகள் உதவி, காரியவெற்றி, விருந்து வைபவம்.

— ஜோஸ்யர்

## விபத்தில் மாணவன் காயம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதியில் ஆனந்தன்வடலி வீதியில் கடந்த சனிக்கிழமை மோட்டார் சைக்கிள் மோதி மாணவன் ஒருவர் காயமடைந்தார்.

கொழும்புத்துறை கிழக்கு 3ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த செல்வன் பேரம்பலம் குமார் (வயது-13) என்ற பாடசாலை மாணவரே இவ் விபத்தில் படுகாயமடைந்தவராவார்.

சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிள் நிற்காமல சென்றுவிட்டது. [154]

## சைக்கிள் திருட்டு

(கொழும்புத்துறை)

தொல்புரம் மத்தியைச் சேர்ந்த முருகேசு சடாட்சரம் என்பவர் தனது சைக்கிளை நல்லூர் கந்தசாமி கோவில் வளவில நிறுத்திவிட்டுக் கும்பிடச்சென்று திரும்பிவந்த போது அவரது சைக்கிளும், சைக்கிளில் வைத்திருந்த ஐயாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும் திடீரென காணாமல்போய்விட்டது. 154

## கொம்படியில் திருடர் தொல்லை

[பளை]

கொம்படிப்பகுதியில் திருடர்களின்தொல்லை அதிகரித்து வருகின்றது அண்மையில கொழும்பிலிருந்து மருதங் கேணியைச் சேர்ந்த ஒருவர் 10,000 ரூபாய் காசு கொண்டு வருகையில் இடைவழியில இனந்தெரியாத சிலர் வழி மறித்து அபகரித்துச்சென்றுள்ளார்கள். [156]

## குமண கப்பல் இன்று செல்கிறது

(அரியாலை)

பருத்தித்துறையில தங்கி நிற்கும் குமண கப்பல் இன்று 16ந் திகதி செவ்வாய்கிழமை தபால் பொதிகளுடன் கொழும்பு செல்கின்றது. மீண்டும் இம்மாத இறுதியில் வருமென எதிர்பாாக்கப்படுகிறது, (59)


## தேவை

குபேட்டா டீசல் லான்ட்மாஸ்டர் இன்ஜின் தேவை. விபரங்களுடன் அறியத் தரவும்.

விளம்பர இல: ஏ 2224, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். (ஏ 2224)

## "சூழல் பாதுகாப்பு வாசகப் போட்டி"

★ 'சூழல் பாதுகாப்பு'. ★ 'காடு வளர்ப்பு'.

★ 'சூழல் மாசடைதல்'. ★ 'நீர்ப் பயன்பாடு'

கருத்துக்குப் பொருத்தமாகச் சிந்திக்க வைக்கும் வாசகங்களை (Slogans) எழுச்சியூட்டும் முழக்கங்களை ஒரு வரி அல்லது இரண்டு வரிகளில் எழுதியனுப்புங்கள்.

★ தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த வாசகங்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

உறைமீது 'சூழல் பாதுகாப்பு வாசகப்போட்டி' என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டிய முகவரி:

### சூழல் பாதுகாப்புப் பிரிவு

**தமிழீழ ஆய்வு நிறுவனம்**

தலைமைச் செயலகம்

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**வாசகங்கள் அனுப்பவேண்டிய கடைசித் திகதி:**

**01 - 07 - 1992**

(சி-2226)


# நீர்ப்பாசன வாய்க்கால்கள் திருத்த நிதி ஒதுக்கீடு

[சித்தன்கேணி]

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட நான்கு நீர்ப்பாசன வாய்க்கால்கள் திருத்தியமைக்கப்படவுள்ளன. இதறகான நிதி இந்த ஆண்டுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நளவராயன் வாய்க்கால், நெடுங்குள வாய்க்கால், வெள்ளராயன் வாய்க்கால், வழுக்கையாறு ஆகிய வாய்க்கால்களை திருத்தியமைக்கப் படவுள்ளன. இந்த நான்கு வாய்க்கால்களும் திருத்தியமைப்பதற்கு 8 லட்சத்து 32 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது [137]

# மாணவர் அடையாள அட்டைகள் வந்துள்ளன!

(உடுவில்)

யாழ்ப்பாண பாடசாலைகளில் இருந்து விண்ணப்பித்த மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகள் யாழ்ப்பாணம் செயலக ஆட்பதிவு திணைக்கள கிளைக்கு வந்து சேர்ந்துள்ளன.

பின்வரும் பாடசாலை மாணவர்களின் அடையாள அட்டைகள் இங்கு வந்துள்ளன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, கொழும்புத்துறை துரையப்பா ம. வி. யாழ். வைத்திஸ்வர வித்தியாலயம், அராலி இந்துக் கல்லூரி, வேலணை சரஸ்வதி வித்தி. நல்லூர் ஸ்தான பாடசாலை, நயினாதீவு ஸ்ரீ கணேசா ம.வி. சங்கானை சிவப்பிரகாசவித்தி. யாழ். புனித பத்திரிசியர் கல்லூரி, இடைக்காடு மகா வித்தி, கொக்குவில் இந்துக் கல்லூரி, உசன் இராமநாதன் ம. வி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, அத்தியார் இந்து, சரவணபவானந்த வித்தி, யாழ். இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, வசாவிளான் ம. ம வி, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி, புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம், அரியாலை பார்வதி வித்தியாசாலை.

இப்பாடசாலைகளை சேர்ந்த அதிபர்கள் நேரில் வந்து அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளலாம்அல்லது தாம் குறித்தனுப்பும் ஆசிரியரிடம் அவறறை கொடுக்குமாறு கடிதம் மூலம் உறுதிப்படுத்தி பெற்று கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (109]

## உதைபந்தாட்டம் இடைநிறுத்தம்

(அரியாலை)

உரும்பிராய் ''ஒஸ்கா', விளையாட்டுக்கழகத்தினரால் கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடைபெற விருந்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் தற்பொழுதுள்ள நிலைமையினுல் இடை நிறுத்தப்பட்டுள்ளன. [59)

ப. நோ. கூ.

## வங்கிக்கிளைகள் இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இராணுவ நடவடிக்கையினுல் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள சங்கக் கிளைகளை அப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் நலன் கருதி வேறு வசதியான இடங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. (72)

## திருடர் தொல்லை அதிகரிப்பு

[பண்டத்தரிப்பு]

இளவாலை, மாரீசன்கூடல், முளளானை ஆகிய இடங்களிலிருந்து அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து வேறிடங்களுக்கு சென்றுள்ள மக்களின் வீடுகளில் திருடர்தொல்லை அதிகரித்து வருகின்றது.

வீடுகளிலுள்ள பலாக்காய், மாங்காய், தேங்காய் என்பன திருடப்பட்டுள்ளது. சிலரின் கோழிகளும், ஆடுகளும் திருடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (72)

## சரணடைய உத்தரவு

(சென்னை)

பொலிஸாரால் தேடப்பட்டுவரும் குமரன் என்ற பத்மநாதனை சரணடையுமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவரிடம் இருந்த ஆறு கப்பல்களில் ஒன்றே அண்மையில் இந்திய கடற்படையால் காரைக்கால் அருகே பிடிபட்டதாகவும், மற்றொரு கப்பல் 1991ஆம் ஆண்டு மலேசிய அகதிகாரிகளினுல் பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாற்பண்ணை ஒன்றை குமரன் தமிழ்நாட்டில் வேலூர் அருகே நடத்திவந்ததாகவும் ஆயுதக்கடத்தல் தொடர்பு மையத்தினை அங்கு நடத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது.

## இன்று

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் இவ் உற்சவத்தில் இம்மாதம் 28ம் திகதி சப்பறமும், 29ம் திகதி திங்கள் ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். [71]

## ஒய்வூதியம்

(சித்தன்கேணி)

காரைநகர் கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு ஒய்வூதியம் வழங்கப்பட்டது.

ஓய்வூதியம் பெறுவோர் கிராமிய வங்கியினரின் இந்த நடவடிக்கையை பெரிதும் பாராட்டுகின்றனர். (137)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தைச் சேர்ந்த யாழ் கோட்டம், வேலணை கோட்டத்தைச்சேர்ந்த சகல சாரணர் குருளைச்சாரணர் குருளைச் சாரணர் தலைவர்களுக்கான விசேட கூட்டம் இன்று 16ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-15க்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## மருந்துதட்டுப்பாடு

(புலோலி)

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலையில் சாதாரண நோய்களுக்கு பாவிக்கப்படும் அஸ்பிரின், பனடோல் உட்பட மலேரியா தடை குளிகைகளும் இல்லை.

# இந்திய - பாகிஸ்தான் போர் ஜூலையில் வெடிக்கும்; இரசாயன, அணு ஆயுதங்கள் பாவிக்கப்படலாம்?

## - அமெரிக்க உளவுத்துறை எச்சரிக்கை -

(வாஷிங்டன்)

ஜூலை மாதத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் போரில் குதிக்கும். இந்தப் போரில் அணுகுண்டுகளும் இரசாயன ஆயுதங்களும் பயன்படுத்தப்படும்.

இவ்வாறு அமெரிக்க இராணுவ தலைமையகத்தின் தேசிய உளவுத்துறை (பென்ரகன்) எச்சரித்துள்ளது.

உலக நிலைமைகளை 24 மணி நேரமும் கண்காணித்து முக்கிய நிகழ்ச்சிகளை அமெரிக்க ஜனாதிபதி, இராணுவ துறைச் செயலர் (அமைச்சர்) இராணுவத் தலைமைத் தளபதி ஆகியோருக்கு அவ்வப்போது தெரிவித்து உஷார்படுத்துவது 'பென்ரகன்' உளவுத்துறையின் வேலையாகும்.

இந்த அலுவலகம் சமீபத்தில் ஒரு ரகசிய அறிக்கையைத் தயாரித்து அமெரிக்க இராணுவத்தின் முக்கிய அதிகாரிகள் மத்தியில் உலாவ விட்டுள்ளது. இந்த ரகசிய அறிக்கையின் முக்கிய பகுதிகளை 'விமானப்படையின் உள்ளே' (Inside the Airforce) என்ற இராணுவ இதழ் வெளியிட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு; பாகிஸ்தானில் பயிற்சிபெற்ற தீவிரவாதிகள் காஷ்மீரில் இந்தியாவுக்கு எதிராகத் தீவிரப்பிரசாரம் செய்து வருகிறார்கள். காஷ்மீர் பிரச்னை தொடர்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் பதற்றம் படுவேகமாக அதிகரித்து வருகிறது.

நேருக்கு நேராக அதிவேகத்தில் வந்துகொண்டிருக்கும் இரு ரயில் வண்டிகளின் நிலையில்தான் இந்த இரு நாடுகளும் உள்ளன. தலைதெறிக்க மோதிக்கொள்ள இரண்டும் தயாராக உள்ளன என்பது நிச்சயம். இந்த மோதல் எப்போது நடக்கும் என்பது மட்டும்தான் தற்போதுள்ள கேள்வி.

பல்வேறு நிகழ்ச்சிப் போக்குகளை வைத்துப் பார்க்கும்போது இந்த யுத்தம் ஜூலை மாதத்தில் (அடுத்த மாதம்) வெடிக்கக்கூடும் இந்த யுத்தத்தில் இரு நாடுகளும் அணுகுண்டுகளையும் இரசாயன ஆயுதங்களையும் பயன்படுத்தக்கூடும்.

குவைத்மீது ஈராக் போர் நடத்தியபோது அதில் அமெரிக்கா தலையிடுவதற்குத், தேவையில்லாமல் நீண்ட காலம் காத்திருந்தது. அந்த மாதிரி, இந்தியா - பாகிஸ்தான் யுத்தம் வெடித்தால் அப்போதும் அமெரிக்கா நீண்டகாலத்திற்கு செயலற்று இருந்துவிடக் கூடாது.

இந்தியாவும் பாகிஸ்தானும் அணுகுண்டு தயாரிப்பதற்கான சக்தியும் திறமையும் கொண்ட நாடுகள் என்பதால் இந்திய-பாகிஸ்தான் போர் வெடித்தால், அதில் அமெரிக்கா உடனே தலையிட வேண்டும். இல்லையென்றால் பேரழிவு ஏற்பட்டுவிடும். உயிர்ச்சேதம், பொருட்சேதம் மட்டுமல்ல, 'சுதந்திர உலகின் தலைவன்' என்ற அமெரிக்காவின் அந்தஸ்தும் கடுமையாக பாதிப்படையும்.

எனவே, இந்திய - பாகிஸ்தான் போர் வெடித்ததும் செய்யவேண்டியது என்ன என்பது பற்றிய கொள்கையை அமெரிக்க அரசு உடனே உருவாக்கியாக வேண்டும். அப்போது அமெரிக்கா எடுக்க வேண்டிய இராணுவ நடவடிக்கைகள் என்னென்ன என்பது பற்றிய நகல் திட்டத்தை இராணுவ உயர் அதிகாரிகள் இப்போதே திரட்டியாக வேண்டும் என்று 'பென்ரகனின்' உளவு அலுவலக ரகசியச் சுற்றறிக்கை வலியுறுத்துகிறது

'அணுஆயுதப் பெருக்கத் தடை ஒப்பந்தத்தில்' கையெழுத்திட இந்தியா மறுத்துவருகிறது செயற்கைக் கோளை ஏவும் ரொக்கெட்டுக்கான 'கிரியோஜெனிக்' எஞ்சினை ரஷ்யாவிலிருந்து வாங்குவதைக் கைவிட இந்தியா மறுத்துவிட்டது. விற்பதைக் கைவிட ரஷ்யாவும் மறுத்து விட்டது

அமெரிக்காவின் பல்வேறு நிர்ப்பந்தங்களையும் மீறி இந்தியா இவ்வாறு செயல்பட்டு வருகிறது. இந்தப் பின்னணியில்தான் இந்திய-பாகிஸ்தான் போர் பற்றிய அமெரிக்க கொள்கையும் இராணுவத் தலையீட்டுக்கான திட்டத்தையும் அமெரிக்கா வகுக்கவேண்டும் என்ற அர்த்தத்தில் அந்த இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் போர்தொடுத்தாலும் சரி அல்லது அதைத் தூண்டிவிட்டு அந்தச் சாக்கில் அமெரிக்கா போர் தொடுத்தாலும் சரி எந்த நிலைமையையும் எதிர்கொள்ள இந்தியா தயாராக இருக்கவேண்டும் என்பதுதான் இந்த ரகசிய அறிக்கையிலிருந்து இந்தியா பெறவேண்டிய பாடம் என்று இந்திய பத்திரிகைகள் பல இந்தியாவை எச்சரித்துள்ளன. (சி)

## மேஜர் முரளி நினைவாக மாணவர் புதிர் போட்டி!

[வட்டுக்கோட்டை]

யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமானது மேஜர் முரளி நினைவு நாளை முன்னிட்டு யாழ் மாவட்ட பாடசாலைமாணவர்களுக்கிடையே புதிர்ப்போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

இப்போட்டி 9 ம் ஆண்டுக்கு மேல் கல்வி கற்கும் மாணவ மாணவிகளுக்கிடையே நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 3 பேர் கொண்ட குழுவொன்று மாத்திரம் பங்குகொள்ளலாம்.

இப்போட்டி பாடசாலை, கொத்தணி, கோட்ட மட்டத்தில் சுற்று அடிப்படையில் நடைபெற்று மாவட்ட மட்டத்தில் முதல மூன்று இடங்களைப் பெறும் பாடசாலைக் குழுக்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும் என மேற்படி மாணவர் இயக்க பிரமுகர் செல்வி ம. வாசுகி தெரிவித்துள்ளார். [139]

## குண்டுவீச்சில் பலியானோர் குடும்பத்திற்கு ரூ. 2000 நிதியுதவி

[பண்டத்தரிப்பு]

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த 10-ம் 11-ம் திகதிகளில் இடம் பெற்ற விமானக் குண்டுவீச்சு சம்பவங்களின் போது பலியானவர்களின் குடும்பங்களுக்கு தலா 2000 ரூபா மரணச் சடங்குகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் மூலம் அவ்வப்பகுதி கிராமசேவை அலுவலர்களினால் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு இப்பணம் நேரடியாக கையளிக்கப்பட்டது. (72)

## முத்தமிழ் விழா ஜூலை 5-ல் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழம் நடாத்தும் மாபெரும் முத்தமிழ் விழா ஜூலைமாதம் யாழ்ப்பாணப் பிரதேசமெங்கும் மூன்று நாட்களும் வன்னிப் பிரதேசத்தில் 7 நாட்களும் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கலைபண்பாட்டுக்கழகம் செய்து வருகிறது.

ஜூலை 5ம் திகதி ஞாயிறு, 6ம் திகதி திங்கள் ஆகிய நாள்களில் மன்னார், பண்டிவிரிச்சான் மாவீரர் அரங்கிலும். ஜூலை 9ம் திகதி வியாழன், 10ம் திகதி வெள்ளி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மாவீரர் அரங்கிலும், 12ம் திகதி ஞாயிறு13ம்திகதி திங்கள், 14ம் திகதி செவ்வாய் ஆகிய நாள்களில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும் முத்தமிழ் விழா நடைபெற உள்ளது.

ஜூலை மாதம 18ம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாவீரர் அரங்கிலும். 19ம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலி மாவீரர் அரங்கிலும், ஜூலை 20 ம் திகதி நெல்லியடி மாவீரர் அரங்கிலும் நடைபெறும். (56)

## குடிநீர் விநியோகம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொம்மைவெளி குடியேற்றத் திட்டத்தில் வாழும் மக்களுக்கு யாழ் மாநகரசபை வழங்கிவந்த குடிநீர் வசதியை நிறுத்திவிட்டதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

கடந்த ஒரு மாத காலமாக இப்பகுதி மக்களுக்கு யாழ். மாநகரசபையினர்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. 90 குடும்பங்கள் குடிநீரினைப் பெற்றுவந்தன.

தற்போது நாவாந்துறைப் பகுதிக்கு மட்டுமே குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. (56)

## சாரணர் சேவை வாரம்

(யாழ்ப்பாணம்)

ஒத்திவைக்கப்பட்டுள்ள யாழ். மாவட்ட சாரணர்களின் சேவை வாரம் நாளை 17ம் திகதி புதன்கிழமைமுதல் ஆரம்பமாகின்றது என உதவி மாவட்ட ஆணையாளர் திரு. இ இராஜ்குமார் அறிவித்துள்ளார்.

## சங்கானையில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட குடும்ப விபரங்கள் சேகரிப்பு

(சித்தன்கேணி)

வரட்சியினால் பாதிப்படைந்துள்ள குடும்பங்களின் விபரங்களை திரட்டித்தருமாறு சங்கானை உதவி அரசாங்க அதிபர் கிராம உத்தியோகத்தர்களை பணித்துள்ளார்.

அப்பிரிவுக்குட்பட்ட 25 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இருந்தும் வரட்சியினால் பாதிப்படைந்துள்ள குடும்பங்களின் விபரங்களை மாதாந்த வருமான ரீதியில் சேகரிக்கப்படவுள்ளது.

1500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானமுடைய குடும்பங்கள், 700 ரூபாவுக்கும் 1500 ரூபாவுக்கும் இடைப்பட்ட வருமானமுடைய குடும்பங்கள், உணவுமுத்திரையுள்ள குடும்பங்களின் விபரங்கள் திரட்டவுள்ளது.

அந்தந்தப் பிரிவு கிராம உத்தியோகத்தர்கள், வரட்சியினால் பாதிப்படைந்தவர்களை தம்மிடம் வந்து பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (137)

## க. பொ. த. (சா) மாணவருக்குமாதிரி முன்னோடி பரீட்சை

(வட்டுக்கோட்டை)

தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகம் க. பொ. த.சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்கு பரீட்சையில் விடை எழுதும் பயிற்சியை அளிக்கும் முகமாக மாதிரி முன்னோடிப் பரீட்சை ஒன்றை நடத்தவுள்ளது

இலங்கை பரீட்சைத்திணைக்களத்தினால் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடத்தப்படவுள்ள க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கே இந்த முன்னோடிப் பரீட்சை நடாத்தவுள்ளது. இந்த முன்னோடிப் பரீட்சையில் தோற்றி சித்தியடையும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குவதோடு மாவட்ட ரீதியில் அதிக பெறுபேறுபெறும் மாணவருக்கு பரிசில்கள் வழங்கவும் மேற்படி கழகப் பரீட்சைக்குழு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [139]

## இன்று

[அரியாலை]

கடந்த 13ந் திகதி நடைபெறவிருந்த மாதகல் புனித அந்தோனியார் திருநாள் இன்று 16ந் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. [59]

## அகதி வீட்டில் திருட்டு

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கையினால் அச்சமடைந்து இடம் பெயர்ந்து அகதியாக சென்ற முள்ளானை வாசி ஒருவரின் வீடு திருடர்களின் கைவரிசைக்கு இலக்கானது.

இவரது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த 4000 ரூபா பெறுமதியான சைக்கிளும் மற்றும் சுவர் மணிக்கூடும் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (72)

## சனசமூக நிலைய சமாசம் தரமான நூல்களுக்கு பரிசு வழங்க முடிவு

(கொழும்புத்துறை)

தரமான ஈழத்துதமிழ் இலக்கிய நூல்கள், அறிவியல் நூல்களுக்கு பரிசுகளை வழங்குவதற்கு யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் முடிவு செய்துள்ளது.

நூலாசிரியர்களும் வெளியீட்டாளர்களும் தமது நாவல்கள், சிறுகதைத்தொகுதிகள், கவிதை நூல்கள், இலக்கியம் மற்றும் பல்துறை நூல்களின் இருபிரதிகளை பரிசிலனைக்காக இல. 33, பருத்தித்துறை வீதியிலுள்ள (ஆரியகுளம் சந்தி) சமாசப்பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறும், நூலாசிரியர்கள் இவ்விடயமாகத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு சமாசத் தலைவர் திரு. டானியல் அன்ரனி தெரிவித்துள்ளார். (154)

## சிகிச்சைபெற்ற நோயாளர் தீவகம் திரும்புவார்கள்

(யாழ்ப்பாணம்]

தீவுப்பகுதிக்கு விரைவில் யாழ்ப்பாணத்தில் சிகிச்சை பெற்று சுகமடைந்த நோயாளர்கள் செல்லவிருக்கின்றனர்.

தீவுப்பகுதியிலிருந்து வந்து பிரசவத்திற்காகவும் மற்றும் வேறு வருத்தங்கள் சம்பந்தமாகவும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்கள் தீவுப்பகுதிக்குச் செல்லும் கப்பலில் அங்கு செல்ல உள்ளனர்.

அங்கு செல்லும் கப்பல் தீவுப்பகுதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும்நோயாளர்களையும் ஏற்றிவரவுள்ளது. (56)

# இராணுவத் தாக்குதல்களினுல் 75 வீதமான மக்கள் உளவியல் ரீதியில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்போது நடைபெற்றுவரும் இரா்ணுவத்தாக்குதல்களினுல் 75 வீதமான மக்கள் உளவியல் ரீதியில் தாக்குண்டு யாழ் போதனுவைத்தியசாலேயில் சிகிச்சை பெற்று வருகின்ருர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு எவ்வாறு சிகிச்சை அளிக்க வேண்டும் என்பது பற்றி நேற்று ரெட்பானு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளின் அனுசரணையுடன் நடைபெற்ற இக்கருத்தரங்கில் டாக்டர் தெய்வேந்திரன், டாக்டர் ஏ சிவசங்கர், வண. மேமியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ் போதனு வைத்தியசாலேயின் வெளிப்பிரிவு நோயாளர் பகுதியில் தற்போது சிகிச்சை பெறுபவர்களில் 75 வீதமானவர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் சிறுவர்களும், வயோதிபர்களுமே இதற்கு இலக்காகியுள்ளார்கள்.

இவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் முறையை முதலில் கிராமப்புற மக்களுடன் ஈடுபாடுள்ள இணையத்தின் பிரதிநிதிகளுக்குக் குறுகிய காலப் பயிற்சி ஒன்றின் மூலம் வழங்க வேண்டும் என்றும் இக்கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது

# தொண்டாவுடன் தமிழ் கட்சிகள் இணைய முடிவு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள ஏழு தமிழ்க் கட்சிகள், அமைச்சர் தொண்டமானுடன் இணைந்து செயற்படப்போவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கட்சிகள் தொண்டமானுடன் சேர்ந்து அரசுடன் இணைந்து இனப் பிரச்னைக்குத் தீர்வுகாண முயற்சிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [ரி]

## கிராம சேவையாளர் பரீட்சையை மீண்டும் நடத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில்கடந்த வாரம் நடைபெருத கிராம சேவையாளர் பரீட்சையை மீண்டும் நடாத்தும்படி கல்வி ஆணையாளரிடம் யாழ். அரச அதிபர் திரு. கா மாணிக்கவாசகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இராணுவ நடவடிக்கைகளினுல் மேற்படி பரீட்சையின் வினுத்தாள்களை பலாலியிலிருந்து உரிய நேரத்துக்கு எடுத்துவர முடியாமல்தடைப்பட்டுப் போய்விட்டதென்றும் ஆகவே இப்பரீட்சையை அடுத்த மாதத்துக்குள் நடத்தும்படியும் அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அநேகமாக இப்பரீட்சை ஆகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் யாழ். நகரில் நடைபெறக் கூடுமென்றும் கொழும்புச் செய்திகள் நேற்றுத்தெரிவித்தன. (வி)

## ராஜீவ் கொலை விவகாரம்: வர்மா கமிஷன் அறிக்கை கையளிப்பு

(புதுடில்லி)

முன்னுள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமாக விசாரணை நடத்திய வர்மா கமிஷன் தனது அறிக்கையை அரசிடம் நேற்று புதுடில்லியில் சமர்ப்பித்தது.

இந்தக் கமிஷனின் செயலர் இரண்டுதொகுதிகள் கொண்ட அறிக்கையை உள்துறை அமைச்சர் திரு. எஸ்.பி.சவானிடம் சமர்ப்பித்தார்.

மிகமிக முக்கியமானவர்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்கும் இப்போதுள்ள பந்தோபஸ்து ஏற்பாடுகளிலுள்ள குறைபாடுகளையும் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இந்த அறிக்கையில் யோசனை கூறப்பட்டுள்ளது. (கே

## மலையகத்தில் தொடர்ந்தும் இளைஞர் கைது

[கொழும்பு]

பதுளை லுணுகலதோட்டத்தில்தீவிரவாத இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கருதி இரு இளைஞர்கள் கடந்த கடந்தவாரம் பொலிஸாரால் செய்யப்பட்டுள்ளனர்,

இவ்விடயம் தொடர்பாக மேலும் இரு இளைஞர்களை தேடி பொலிசார் தீவிர தேடுதல் மேற்கொண்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [க]

## பாட்டாளி மக்கள் கட்சி ராம்தாஸ் கைது

(சென்னை)

நேற்று விவசாயிகளுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்திய பட்டாளி மக்கள் சட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் உட்பட 7 ஆயிரம் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசு, விவசாயிகளின் நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கு 100 ரூபா வரி வசூலிப்பதை எதிர்த்தே பாட்டாளி மக்கள் கட்சி ஆர்ப்பாட்டம் நடாத்தியது.

பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள், தமது கழுத்தில் 'தூக்குக் கயிறு' மாட்டியபடி இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினுர்கள்.

கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்குமாறு அக்கட்சியின் முக்கியபிரமுகர் பண்ருட்டி ராமச்சந்திரன் தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். (கே)

### 15 தமிழர்

(1ம்-பக்கத் தொடர்ச்சி;

ஸில் ஆயுதம் தாங்கிய மூவரினுல் இந்த பயணிகள் கடத்திச்செல்லப்பட்டனர்.

பஸ்ஸில் பயணம் செய்தவர்களில் 15 பேர் கடத்திச் செல்லப்பட்டபின்னர் எஞ்சிய பயணிகளுடன் பஸ் பயணம் தொடர அனுமதிக்கப்பட்டதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (ரி)

### தமிழ் இளைஞர்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விற்கு மேல் மோசடி செய்துள்ளதுடன் மேற்படி இளைஞர் யுவதிகளை உரிய நாடுகளுக்கும் அனுப்பாது இடைநடுவில் விட்டதாக பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து வடக்கு-கிழக்கு இளைஞர்-யுவதிகள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமெனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ், நகர கரையோரப் பகுதிகளை நோக்கி நேற்று நள்ளிரவு கடுமையான ஷெல்தாக்குதல் நடத்தப்பட்டது.

ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து, கரையோரப் பகுதியில ஹெலிகொப்டர் ஒன்று ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தது.

இதனையடுத்து கரையோர பகுதி மக்கள் இரவோடிரவாக பாதுகாப்பு வலய பகுதியை நோக்கி இடம் பெயர்ந்தனர்.

## விகாரையில் தீ விபத்து

[கொழும்பு]

மிகிந்தலை ரஜமகா விகாரையில் நேற்று முன்தினம் இரவு தீ விபத்து ஏற்பட்டது.

நேற்று முன்தினம் மிகிந்தலை ரஜமகா விகாரையில் பொசன் நோன்மதி தினம் கொண்டாடப்பட்டது. இவ்வைபவத்தில் லட்சக்கணக்கான பௌத்தர்கள் கலந்துகொண்டனர்.

சமய வைபவங்கள் நடந்துகொண்டிருந்தபோதே தீ விபத்து ஏற்பட்டதாகவும எனினும் உடனடியாகத் தீ அணைக்கப்பட்டதால் சேதம எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது (சி)

## இன்று மின்னொளியில் கூடை பந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வரும் கூடைப் பந்தாட்ட' சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று மாலை 6-00 மணிக்கு மின்னொளியில் நடைபெறும் அரையிறுதியாட்டத்தில் பல்கலைக்கழக 'ஏ' அணியை எதிர்த்து ஷப்ற அணியும் பல்கலைக்கழக 'டீ' அணியை எதிர்த்து சென்ற லேட்ஸ் அணியும் போதும். (சி)

### அரசு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாஸ் வானொலி தெரிவித்தது.

இந்த மறைமுகத் தூது முயற்சி எதுவும் பயனளிக்க வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

### புலிகளால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாளர்கள் தெரிவித்துள்ளதாக ஏ. எவ். பி. செய்தியாளர் தெரிவித்தார்.

புலிகள் தமிழீழம் என்னும் தனிநாட்டுக் கொள்கையில் நிலையான எண்ணம் கொண்டவர்கள் என்றும் பார்வையாளர்கள்தெரிவித்துள்ளனர். [ரி]

### 8 அரசியல்கட்சி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை தூதுக்குழுவினர் ஜனுதிபதியிடம் வலியுறுத்தினர்

தெரிவுக்குழு நடவடிக்கைகளில் சகலபிரதான அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகள் முழுமையான அளவில் பங்கு கொள்ள வேண்டுமென்று இச்சந்திப்பின்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஜனுதிபதியுடனுன இச்சந்திப்பின்போது அரசு சார்பில் பிரதமர்டி. பி. விஜயதுங்கா, அமைச்சர்கள் விஜயபால மெண்டிஸ், எஸ். தொண்டமான், ஏ. ஸி. எஸ். ஹமீட், ரணில் விக்கிரமசிங்கா, ஜேர்ன் அமரதுங்கா, கலாநிதி விமல் விக்கிரமசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்(ரி)

## கே. ஜி. பி. விவகாரம்: விசாரணை நடத்துமாறு கட்சி பிரமுகர் வலியுறுத்து

(கொழும்பு)

1989-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சோவியத்தின் உளவுப்பிரிவான கே. ஜி. பி. நிதி உதவி அளித்ததாக 'இந்து' பத்திரிகை தெரிவதத தகவல் குறித்து பூரண விசாரணை நடாத்தப்படுமென சுதந்திரக்கட்சிப் பிரமுகர்கள் வலியுறுத்தியுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்விவகாரம் தொடர்பாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் சலசலப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## புதிய ராணுவ முகாம்

(திருகோணமலை)

திருகோணமலை வெருகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் அவசர அவசரமாக புதிய இராணுவ முகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

### இந்தியாவில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பொருளாதாரம் நெருக்கடி நிலையில் இருப்பதால் இந்த வேலைநிறுத்தத்தை கைவிடுமாறு அரசு கோரியுள்ளது. மேலும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அரசு அறிவித்துள்ளது. (சி)

### அலம்பில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

56 ஒன்று ரக துப்பாக்கி-1, ரி 81 ஒன்று ரக துப்பாக்கி-1, உயர்வலு தொலைத்தொடர்பு சாதனம்-1, நடுத்தரரவைகள் 137, றம் ரவைக்கூடு-1, ஏ. கே. ரவைக்கூடுகள்-6, ஏ.கே. இலகு இயந்திர துப்பாக்கிக்குரிய லிங்குகள் 76 ஆகிய இராணுவத் தளபாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. (வி-ரி)

### சிமெந்து

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நேற்று யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரை சந்தித்து தமது நிலைமைகளை விளக்கமாகத் தெரிவித்தார்கள்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் வேலை செய்த 5000க்கு மேற்பட்ட ஊழியர்கள் கடந்த இரண்டு வருடங்களாக பெரும் பாதிப்புக்குள்ளாகி கஷ்டப்பட்டுவருவதாகவும் தமக்கு நிவாரணம் வழங்கும்படியும் அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்தனர். (வி)

### பென்சன்

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று நீக்கப்பட்டதால், கடந்த மே மாதத்துக்குரிய பென்சன்கொடுப்பனவு இன்று காலை 9-00 மணி முதல் 10-00 மணி வரை சகல வங்கிகளிலும் வழங்கப்படும்மென வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

### தமிழகத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எடுக்குமாறு காவல் துறையினருக்கு தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

இதேவேளை பிறமாநிலங்களில் இல்லாத அளவிற்கு, தமிழகத்தில் முன்கூட்டியே அடக்குமுறை நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதாக தி. மு. க. தலைவர் கருணுநிதியும் மாக்ஸிஸ்ட் கட்சி தலைவரும் குற்றஞ் சாட்டியுள்ளனர். (கே சி)

## நூல் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் எமது உணவுத்தேவையும் உற்பத்தி இலக்குகளும்' என்ற நூல் வெளியீடு, யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நாளை 17ந்திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

முதற்பிரதியை தமிழீழ ஆய்வுநிறுவனப்பொறுப்பாளர் ரவி வழங்க, விடுதலைப்புலிகள் மூத்த உறுப்பினர் இளங்குமரன் பெறுகின்றுர்.

நூலை திரு.யோகி அறிமுகம் செய்து வைக்கவுள்ளார். (க.

## 60 மாணவர் நீரில் மூழ்கி மரணம்

[பங்களூர்]

கர்நாடக மாநிலத்தில் பங்களூருக்கு அருகே பாடசாலை மாணவர்கள் 60 பேர் ஆற்று நீரில் மூழ்கி மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மீட்புப்பணியினா 28 பேரை மீட்டிருந்த போதும் அதில் 6 பேர் மருத்துவமனையில் இறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (கே)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the General Post office Srt Lanka under Licence Nnmber B/10336/86